IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No.4703 of 2024

Deposition of witness for

PW-1

Name : Thiru. Balaji

Father's Name : V.A.Srinivasan

Age : 60 Years

Address : Flat 4A, CORAL SANDS, 54B/26, Beach Road, Kalakshetra Colony, Besant Nagar, Chennai-90.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of August 2025 .

---

28.08.2025

PW1 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

சாட்சி சத்யபிரமாணம் செய்யப்பட்டார்

நான் சொந்தமாக தொழில் செய்து வருகின்றேன் பிரிண்டர்ஸ் ஐ வாடகைக்கு விடும் தொழிலை செய்து வருகிறேன். எம்பிஏ வரை படித்திருக்கின்றேன் முதலில் பாலிடெக்னிக் படித்து அதற்கு பின்னர் இளங்கலை அறிவியல் கணிதம் முடித் பின்னர் முதுகலை பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் படித்து அதற்கு பின்னர் எம்பிஏ படித்தேன். 2012 ஆம் வருடத்தில் சத்சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்தேன். நான் மேற்படி சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்த உடனே நடந்த முதல் தேர்தலிலேயே தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். மேற்படி சங்கத்தில் எத்தனை நபர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள் என்ற விவரம் குறிப்பாக எனக்கு தெரியாது.என்னை வரசித்தி விநாயகர் கோவிலில் தக்கார் ஆக நியமிக்கப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டேன் என்று சொன்னால் சரிதான்.அவ்வாறு பரிந்துறை செய்வதற்கான ஆவணத்தை தாவா

தாக்கல் செய்த பொழுது தாக்கல் செய்திருந்தேன் அந்த ஆவணம் நகலாக இருந்ததால் என்னால் என்னுடைய தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய முடியவில்லை. என்னுடைய பெயரை குறிப்பிட்டு நான் தான் தக்கராக நியமிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் எதுவும் இயற்றப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. சத்சங்கத்தில் தலைவராக இருக்கின்ற நபர் தக்கராக நியமிக்கப்படலாம் என்று ஏற்கனவே தீர்மானம் ஏற்றப்பட்டு இருப்பதால் இந்து சமய அறநிலைத்துறையின் ஆணையர் அவர்கள் என்னை வரசித்தி விநாயகர் கோவிலுக்கு தக்கராக நியமித்தார்.அந்த தீர்மானத்தில் இந்து அறநிலைத்துறை ஆணையர் அவர்களே என்னை தக்கராக நியமிப்பார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை. 2014 ஏப்ரல் வரை நான் தலைவராக இருந்தேன். சத்சங்கத்தின் தலைவரே வருசித்தி விநாயகர் கோவிலுக்கு தக்கராக நியமிக்கப்படுவதற்கான பிறப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் பெயரிலேயே நியமிக்கப்பட்ட நான் மேற்படி பதவி முடிந்த பின்னர் எனக்கு பின்னால் வந்த தலைவரிடம் மேற்படி பதவியை ஒப்படைத்தேனா என்று சொன்னால் இந்து அறநிலைத்துறை ஆணையர் அவர்கள் என்னை தக்கராக நியமித்து பிறப்பித்த உத்தரவில் Trust Board அமையும்வரை நானே மேற்படி கோவிலின் தக்கராக இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருப்பதால் என்னுடைய தலைவர் பதவி முடிந்தவுடன் நான் தக்கர் பதவியிலிருந்து விடுவிக்கப்படவில்லை என்று சாட்சி கூறுகின்றார்.ஆனால் அதுபோல ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. நான் தக்கராக பதவியில் இருக்கும் வரசித்தி விநாயகர் கோவிலுக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு இருக்கும் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரங்களை தெரிந்து கொள்ளாமலேயே ஒன்பது வருடங்களாக நான் அந்த பொறுப்பில் இருந்தேன். கோவிலின் வருமானம் சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை இந்து அறநிலைத்துறை பார்த்துக் கொள்வதால் அதை கவனிக்க வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்று சாட்சி கூறுகின்றார். தக்கர் என்கின்ற பொறுப்பு எந்த சூழ்நிலையில் எதற்காக அளிக்கப்படுகின்றது என்று சொன்னால் எதற்காக தக்கரை நியமிக்கின்றார்கள் என்று எனக்கு தெரியாது ஆனால் வரசித்தி விநாயகர் கோவிலை இந்து அறநிலையத்துறை அவர்களுடைய கட்டுப்பாட்டிற்கு எடுத்துக் கொண்ட பிறகு ஒரு தகுதி வாய்ந்த நபரை தக்கராக நியமிக்க வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் சத்சங்கம் பிறப்பித்த தீர்மானத்தின் அடிப்படையில் என்னை தக்கராக நியமித்தார்கள். தகுதி வாய்ந்த நபரே கோயிலின் பொறுப்பாளர் என்று சொன்னால் அது சரியல்ல கோவிலின் செயல் அலுவலர், தக்கரும் தான் கோவிலுக்கு பொறுப்பு என்று சாட்சி கூறுகின்றார். இந்து அறநிலையத்துறையின் சட்டதிட்டத்தை படித்திருக்கின்றனா என்றால் சரியாக படித்ததில்லை என்று சாட்சி கூறுகின்றார்.தக்கருடைய வேலையே தினசரி பூஜைகள்

ஒழுங்காக கோவில் நடக்கின்றதா என்பதை பார்ப்பதற்கும் கோவிலில் பணிபுரியும் நபர்களுக்கு மாத வருமானம் கொடுப்பதற்கும் மேற்படி கோவிலில் திருவிழாக்கள் சரியான முறையில் நடத்தப்படுகின்றதா என்பதை பார்ப்பதற்கும் தான் என்று சாட்சி கூறுகின்றார். எனக்கு கோவிலின் ஒரு நாளைக்கான வருமானம் என்னவென்று தெரியாது. செயல் அலுவலர் சொன்னால் மட்டுமே தெரிந்து கொள்ள முடியும். நான் செயல் அலுவலர் கட்டுப்பாட்டிலே வேலை செய்தேன் என்று சொன்னால் அது சரியில்லை. எனக்கு தின வருமானமும் வார வருமானமும் மாத வருமானமும் வருட வருமானமும் தெரியும் என்று சொன்னால் அது சரியில்லை. கோவிலில் இரண்டு வங்கி கணக்குகளை பராமரித்து வருகின்றார்கள் ஒரு வங்கி கணக்கு செயல் அலுவலரின் பெயரிலும் மற்றொரு வங்கி கணக்கு கோவிலின் பெயரிலும் இருக்கின்றது கோவிலுக்கு வருகின்ற வருமானம் முழுவதும் கோவிலின் வங்கிக் கணக்கில் தான் செலுத்துவார்கள் நான் கோவில் வங்கி கணக்கிலிருந்து காசோலையை கொடுப்பேன். மேற்படி கோவிலில் இரண்டு வங்கி கணக்குகள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.ஒரே ஒரு வங்கி கணக்கு மட்டுமே கோவிலை நிர்வகிக்க போதுமானது என்றும் செயல் அலுவலரின் பெயரில் வங்கி கணக்கு இருப்பதற்கான அவசியம் என்னவென்றால் அது சம்பந்தப்பட்ட விவரத்தை இந்து அறநிலையத்துறையை கேட்டு தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சாட்சி கூறுகின்றார்.கோவிலின் பெயரில் உள்ள வங்கிக் கணக்குக்கான காசோலையில் நான்தான் கையொப்பம் விட்டுக் கொடுப்பேன் அந்த காசோலையை செயல் அலுவலருக்கு தான் கொடுப்பேன். மூலமாக பணத்தை பெற்று நான் செலவழிப்பது இல்லை என்று சாட்சி கூறுகிறது. கோவில் பெயரில் உள்ள வங்கிக் கணக்கை நானே பராமரிக்க வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல மேற்படி வங்கி கணக்கை பராமரிக்க வேண்டியது இந்து அறநிலையத்துறையின் வேலை. நான் ஒவ்வொரு முறையும் செயல் அலுவலருக்கு கொடுக்கின்ற காசோலை சம்பந்தப்பட்ட விவரங்களை பராமரித்து வரும் தீர்மான புத்தகத்தில் நானும் செயல் அலுவலரும் கையெழுத்திட்டு பராமரிக்கின்றோம். வங்கி காசோலையில் எவ்வளவு பணம் இருக்கின்றது என்பதை மேலாளர் பார்த்து சொல்லும்போது மட்டும் தான் அதற்கு ஏற்றவாறு காசோலை கொடுப்போம் அவ்வாறு மேனேஜர் கூட மாத கடைசியில் சம்பளம் கொடுக்கும் போது மட்டுமே வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருக்கின்றது என்பதை பார்த்து சொல்லுவார் என்று சாட்சி கூறுகின்றார் கோவில் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருக்கின்றது என்ற விவரத்தை வங்கிக் கணக்கில் கிரெடிட் சம்பந்தப்பட்ட விவரத்தை பதிவு செய்து வந்தால் தெரிய வரும். மேற்படி கோவிலின் வரவு செலவு எதுவும் என்னுடைய கையில் இல்லை வருமான வரி செலுத்துவது கூட இந்து அறநிலைத்துறையே பார்த்துக்

கொள்ளும் அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று சாட்சி கூறுகின்றார். இந்து அறநிலையத் துறை தான் கோவில் வங்கி கணக்கு சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளையும் வருமானவரி ரிட்டன் சம்பந்தப்பட்ட விவரங்களையும் பார்த்துக் கொள்வார்கள் அவ்வாறு பார்த்துக் கொண்டார்கள் என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதையாவது தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினால் நான் அதுபோல ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி கூறுகின்றார். தக்கர் என்கின்ற பொறுப்பு போர்டு ஆப் ட்ரஸ்ட் கோவிலில் இல்லை என்ற காரணத்திற்காக தான் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

மேற்படி கோவிலில் நானே தொடர்ந்து தக்கராக இருக்க வேண்டும் என்று உத்தரவு எதுவும் ஆணையர் இந்து அறநிலைத்துறை அவர்களால் பிறப்பிக்கப்படாத காரணத்தினால் தான் என்னால் என்னுடைய நியமன உத்தரவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியவில்லை என்று சொன்னால் அது சரியல்ல அசல் என்னிடம் இல்லாத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை ஆனால் தாவாவுடன் சேர்த்து என்னுடைய நியமன உத்தரவின் நகலை தாக்கல் செய்திருக்கின்றேன் என்று சாட்சி கூறுகின்றார். என்னை ஆணையர் இந்து அறநிலைத்துறை தான் தக்கராக நியமித்தார் என்பது 101 சதவீதம் உண்மை. ஆணையர் அவர்கள் வழங்கிய உத்தரவை அடிப்படையாகக் கொண்டுதான் உதவி ஆணையர் இந்து அறநிலையத்துறை அவர்கள் எனக்கு நியமன உத்தரவை வழங்கினார் என்று சாட்சி மீண்டும் கூறுகின்றார். மேற்படி கோவிலின் மாத வருமானம் ரூபாய் பத்தாயிரம் இருக்குமா என்று சொன்னால் அது சரியல்ல கோவிலில் சுமார் 14 நபர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள் அனைவருக்குமாக சேர்த்து மாத வருமானமே ரூபாய் ஒரு லட்சம் செலுத்தப்படும் என்று சாட்சி சொல்லுகின்றார். ஒவ்வொரு முறையும் செயல் அலுவலர் அவர்களுக்கு காசோலை கொடுக்கும் பொழுது அதற்காக ஒரு தீர்மானத்தை பிறப்பித்து அதற்கு பின்னரே கொடுப்பேன் என்றும் அதன் அடிப்படையிலேயே மாத வருமானத்திற்காக எவ்வளவு தொகைக்காக காசோலை கொடுத்தேன் என்ற விவரம் எனக்கு தெரியும் என்று சாட்சி கூறுகின்றார். நான் சத்சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தினால் தான் வரசக்தி விநாயகர் கோவிலில் தக்கராக நியமிக்கப்பட்டேன் என்றும் என்னுடைய தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட உடன் தக்கர் பதிவில் இருந்தும் நானாகவே நின்று இருக்க வேண்டும் என்றும் ஆனால் அறநிலையத்துறையின் உதவியுடன் அந்த பொறுப்பை தொடர்ந்து வகித்து கோயில் உடைய நலனுக்கு எதிராக செயல்பட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. வா.த.சா.ஆ.5 மாண்பமை உயர்நீதிமன்றம் பிறப்பித்த விவரம் எனக்கு தெரியும். இந்து அறநிலையத்துறை வரசித்தி விநாயகர் கோவில்

நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்று வா.த.சா.ஆ.5 பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Sd/-K.Geetharani, M.A., M.L.,

28.08.2025

III Addl. Sessions Judge.
II Addl. Sessions Court (FAC).
City Civil Court, Chennai.